2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 5

## பயிற்சி 7

பெயர் ____________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பேச்சுப் பயிற்சி**

## அஞ்சலகம்

- அஞ்சல் அனுப்பும் இடத்தை அஞ்சலகம் என அழைப்பர்.
- அஞ்சல்களை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்தில் சேர்ப்பது அஞ்சலகத்தின் தொழிலாகும்.
- நாம் ஒருவருக்கு எழுதும்மடலை அஞ்சல் என்று கூறுகிறோம்.
- அஞ்சல் தொடக்கத்தில் கால் நடையாக எடுத்துச் செல்லப்பட்டது.
- பின்னர் குதிரை வீரர்கள், பழக்கப்பட்ட புறாக்கள் மூலம் அஞ்சல் அனுப்பப்பட்டது.
- அறிவியல் வளர்ச்சி விரிவடைய உந்துகள் மூலம் அஞ்சல் அனுப்பப்படுகின்றன.
- இன்று கணினியின் வளர்ச்சியால் மின்னஞ்சல் மூலம் அதிகமான அஞ்சல்கள் அனுப்பப்படுகின்றன.
- கணினி மூலம் அஞ்சல்களை மிகவிரைவாகவும் குறைந்த செலவிலும் அனுப்பலாம்.
- பொதிகளையும் அஞ்சல் மூலம் அனுப்பலாம்.



2. **வாசித்தல்**

ஒருநாள் அறிவன் தன் நண்பனுடன் விளையாடக் கடற்கரைக்குச் சென்றான். அப்பொழுது அங்கு சிறுவர் பலரும் தங்கள் பெற்றோருடன் கடற்கரைக்கு வந்திருந்தனர். அறிவன் நண்பனுடன் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தான். எதிர்பாராத வகையில் திரும்பிப் பார்த்தான். ஒரு சிறிய குழந்தை மெல்லமெல்ல நடந்து கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. பெற்றோர் கதைத்துக் கொண்டிருந்ததனால் அதனைக் கவனிக்கவில்லை. கடலில் இருந்து பெரிய அலை ஒன்று வந்தது. குழந்தை அலையில் அகப்பட்டுக் கீழே விழுந்து விட்டது. அடுத்த அலை வருவதற்கு முன்னர் அறிவன் கத்தியபடியே பாய்ந்து சென்று குழந்தையைக் காப்பாற்றினான். எல்லோரும் அறிவனின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். குழந்தையின் பெற்றோர்கள் ஓடிவந்தனர். அறிவனிடம் இருந்து குழந்தையை வாங்கினர். அறிவனுக்கு நன்றி கூறினர்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

3. **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று ________________.
  (புறநானூறு, சிலப்பதிகாரம், நாலடியார்)
- தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் ________________.
  (12, 18, 30)
- பழமொழி: தோள் ________________ தோழன்.
  (கெடுப்பான், கொடுப்பான், கொடுப்பாள்)
- கதிரவன் காலிக்கும் திக்கு ____________________.
  (மேற்கு, வடக்கு, கிழக்கு)
- பாம்பைக் கண்ட சிறுவனின் இதயம் ____________________ என அடித்தது.
  (மடமட, படபட, மளமள)
- ________________ உடலை உறுதியாக வைத்திருப்போம்.
  (நீங்கள், அவர்கள், நாங்கள்)
- குயிலி நேற்று பள்ளிக்குச் ________________.
  (சென்றாள், செல்வாள், செல்கின்றாள்)
- வயலும் வயல் சார்ந்த இடமும்
  (குறிஞ்சி, மருதம், முல்லை)
- உவர்ப்புச் சுவை உடையது ____________________.
  (நெல்லி, உப்பு, பாக்கு)
- முல்லை நிலத்துக்குரிய மரம்
  (கொன்றை, வேம்பு, வாகை)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

- ஒற்றுமையாக வாழ்ந்தால் உலகில் ______________ காணலாம்.
(இறக்கம், ஏற்றம், வேற்றுமை)

- பேணுதல் என்ற சொல் குறிப்பது ______________.
(பதுக்கி வைத்தல், மறைத்து வைத்தல், பாதுகாத்தல்)

- அருண்மொழித்தேவன் என்ற பெயருக்குரிய மன்னன் ______________.
(இராசராசசோழன், இராசேந்திரசோழன், குலோத்துங்கசோழன்)

- பழமொழி: ______________ பசித்தாலும் புல்லைத் தின்னாது.
(சிங்கம், கரடி, புலி)

- கண்பார்வை இழந்தவரும் கண்டுணரும் கலை ______________.
(சிற்பம், ஓவியம், நடனம்)

- மாமல்லன் என்று அழைக்கப்பட்டவன் ______________
(மகேந்திரபல்லவன், நரேந்திரபல்லவன், நரசிம்மபல்லவன்)

- கடலும் கடல் சார்ந்த இடமும் ______________.
(நெய்தல், குறிஞ்சி, முல்லை)

- செண்பகம் ______________ நிலத்துக்குரிய பறவை.
((முல்லை, குறிஞ்சி, நெய்தல்)

- பழந்தமிழ் பண்பாடு, வரலாறு, கலைகள் என்பவற்றைக் கூறும் நூல் ______________.
(திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம்)

- மழை வெள்ளம் வாய்க்கால் வழியாகச் ______________ என்று ஓடியது.
(கடகட, சலசல, படபட)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

4. **தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

| | | |
|---|---|---|
| நறநற | குபுகுபு | மடமட |
| சலசல | கடகட | |

- ஆற்று நீர் குன்றுகள் இடையே ______________________ என ஓடியது.
- வெக்கையால் தவித்த மாடு நீரை ______________________ எனக் குடித்தது.
- மாட்டுவண்டி சாலையில் ______________________ எனச் சென்றது.
- போர் வீரனது காயத்தில் இருந்து குருதி ______________________ எனக் கொப்பளித்தது.
- எலி மரத்தை ______________________ எனக் கடித்தது.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

5. **பின்வரும் சொற்களுள் இரண்டு சொற்கள் ஒத்த கருத்துடையவை. ஒரு சொல் வேறுபட்ட கருத்துடையது, அதன் கீழ்க் கோடிடுக.**

| | | |
|---|---|---|
| எ. கா. அழகு | எழில் | <u>அலங்கோலம்</u> |
| ➢ ஏர் | தேர் | கலப்பை |
| ➢ இன்னல் | இன்பம் | உவகை |
| ➢ புனிதம் | தூய்மை | களங்கம் |
| ➢ சினம் | கோபம் | சாந்தம் |
| ➢ தொன்மை | புராதனம் | நவீனம் |
| ➢ வனம் | ஆகாயம் | காடு |
| ➢ சண்டை | போர் | சமாதானம் |

6. **தமிழில் மாற்றி எழுதுவோம்.**

- Pencil case ______________________
- Poverty ______________________
- Animal ______________________
- Market ______________________
- Swim ______________________
- Honest ______________________
- Patience ______________________
- Nineteen ______________________
- Forget ______________________
- Sweet ______________________
- Holiday ______________________
- Safety ______________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**7. பாட வினாக்களுக்கு விடை தருக.**

- ஆடற்கலையின் இரு பெரும்பிரிவுகள் எவை?

- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கதையில் பறவைகளின் மகிழ்வுக்கு என்ன கரணியம்?

- நற்பண்புடையோரது நட்பு எத்தகையது?

- இளங்கோவின் தந்தையின் பெயர் என்ன?

- மாட்டுப்பொங்கல் எப்போது கொண்டாடப்படும்?

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5